இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

பணியாளர் வெற்றிடங்கள்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை (CAASL) மூலோபாய திட்டமிடல், தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் கடுமையான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ், தேசிய சட்டத் தேவைகள் மற்றும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்க பாதுகாப்பான திறமையான வழக்கமான மற்றும் சுற்றுச்சூழல் நட்புடன் தேசிய சிவில் விமானச் சேவை அமைப்பின் செயற்பாட்டை உறுதி செய்கிறது. இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் சிறந்த தகுதி மற்றும் விரிவான அனுபவத்தைக் கொண்ட ஆற்றல் மிக்க, அனுபவமுள்ள மற்றும் சுய உந்துதல் கொண்ட பணியாளர்களைத் தேடுகின்றது.

பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்)
Director (Information and Communication Technology)
பதவிக் குறியீடு HM-1-1-D12 பதவிகளின் எண்ணிக்கை - 01

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 140,640 – 15 x 4,100 – 202,140 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதி முதல் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 251,319.00 ரூபாவாகும். (சொந்த வாகனத்தைப் பயன்படுத்தினால் 50,000.00 ரூபா போக்குவரத்துக் கட்டணம் உள்ளடங்கும்)

  எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீற்றர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- CAASL இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

தகைமைகள் மற்றும் அனுபவம்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்	உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் விருப்பத் தேர்வு 1 அல்லது 2)
1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஒரு இளமாணிப் பட்டம் மற்றும் 2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் ஒரு பட்டப் பின்படிப்பு (முதுமாணி) தகைமை மற்றும் 3. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருட கால அனுபவம்.	**விருப்பத் தேர்வு 1** வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல் **விருப்பத் தேர்வு 2** தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்

சிரேஷ்ட சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (விமான வளிமண்டலவியல்)
Senior Civil Aviation Inspector (Aeronautical Meteorology)
பதவிக் குறியீடு MM-1-1-AN5 பதவிகளின் எண்ணிக்கை - 01

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MM 1-1) - ரூபா 91,690-10 x- 2,440-15 x 3,450- 168,240 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 205,510.00 ரூபாவாகும்.
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 120,000.00 ரூபா.
- CAASL இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

தகைமைகள் மற்றும் அனுபவம்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் தொலைத்தொடர்பாடல் / விமானவியல் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத வளிமண்டல பௌதிகம், பௌதிக விஞ்ஞானம், போக்குவரத்து, வான்வெளி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது பொறியியல் நெறிமுறையில் கற்ற கல்வியுடன் விஞ்ஞான இளமாணிப் பட்டம் அத்துடன் வளிமண்டலவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் முன்னறிவிப்பாளராக அல்லது வானிலை நிபுணராக எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம்

சிரேஷ்ட சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (வான் போக்குவரத்து முகாமைத்துவம் - தொழில்நுட்பம்)
Senior Civil Aviation Inspector (Air Traffic Management-Technical)
பதவிக் குறியீடு MM-1-1-AN3 பதவிகளின் எண்ணிக்கை - 01

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MM 1-1) - ரூபா 91,690-10 x- 2,440-15 x 3,450- 168,240 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 205,510.00 ரூபாவாகும்.
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 170,000.00 ரூபா.
- CAASL இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

தகைமைகள் மற்றும் அனுபவம்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்	உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் விருப்பத் தேர்வு 1 அல்லது 2)
விருப்பத் தேர்வு 1 இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் தொலைத்தொடர்பாடல் / விமானவியல் துறையில் நான்கு (04) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம் அத்துடன் விமான வழிசெலுத்தல் சேவைகள் மற்றும் தரை உதவியாளர்களை வழங்குதல் அல்லது அரசாங்கத் திணைக்களம்/ பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இலத்திரனியல்/ தொலைத்தொடர்பாடல்/ விமானவியல் பொறியியலாளராக எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம் **விருப்பத் தேர்வு 2** பதவி தொடர்பான விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அரசாங்கத் திணைக்களம்/ பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இலத்திரனியல்/ தொலைத்தொடர்பாடல்/ விமானவியல் பொறியியலாளராக எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம்	**விருப்பத் தேர்வு 1** வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல் **விருப்பத் தேர்வு 2** 1. சிவில் விமான சேவைகள் பரீட்சகராக (விமான தகவல் சேவை) குறைந்தபட்சம் ஆறு (06) வருட கால சேவை அனுபவம். மற்றும் 2. கடந்த ஆறு (06) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் மற்றும் 3. விமான போக்குவரத்து முகாமைத்துவ துறையில் நான்கு (04) வாரங்களுக்குக் குறையாத ICAO ஒப்புதல் அளிக்கப்பட்ட பயிற்சிக் கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மற்றும் 4. வருடாந்த செயற்றிறனில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

விருப்பத் தேர்வு 3 மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / வாழ்தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்றிறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இலத்திரனியல்/ தொலைத்தொடர்பாடல்/ விமானவியல் பொறியியலாளராக எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம்	

முகாமையாளர் (விமானசேவை பாதுகாப்பு கண்காணிப்பு)
Manager (Aviation Safety Monitoring)
பதவிக் குறியீடு MM-1-1-DM -2 பதவிகளின் எண்ணிக்கை - 01

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MM 1-1) - ரூபா 91,690-10 x- 2,440-15 x 3,450- 168,240 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 205,510.00 ரூபாவாகும்.
- CAASL இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

தகைமைகள் மற்றும் அனுபவம்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்	உள்வாரி விண்ணப்பதாரிகள்
விருப்பத் தேர்வு 1 இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம் சகிதம் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் நிறைவேற்றுத் தர கொள்ளளவில் தகைமைக்குப் பின்னரான எட்டு (08) வருடகால அனுபவம். **விருப்பத் தேர்வு 2** மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்பம் / வாழ்தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்றிறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் நிறைவேற்றுத் தர கொள்ளளவில் தகைமைக்குப் பின்னரான எட்டு (08) வருடகால அனுபவம்.	**விருப்பத் தேர்வு 1** வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல் **விருப்பத் தேர்வு 2** 1. உதவி முகாமையாளராக (விமான பாதுகாப்பு கண்காணிப்பு) குறைந்தபட்சம் ஆறு (06) வருட கால சேவை அனுபவம். மற்றும் 2. கடந்த ஆறு (06) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் மற்றும் 3. வருடாந்த செயற்றிறனில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (வான் போக்குவரத்து முகாமைத்துவம் - தொழில்நுட்பம்)
Civil Aviation Inspector (Air Traffic Management-Technical)
பதவிக் குறியீடு MA 5-3-AN 3 - பதவிகளின் எண்ணிக்கை - 01

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MA5-3) - ரூபா 79,440-10 x- 2,040-15 x 2,230 - 144,440 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 166,117.00 ரூபாவாகும்.
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவாக ஏறத்தாழ 130,000.00 ரூபா.
- CAASL இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

தகைமைகள் மற்றும் அனுபவம்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் தொலைத்தொடர்பு பிரிவில் கற்று குறைந்தது நான்கு (04) வருடங்கள் கொண்ட பொறியியல் இளமாணிப் பட்டம் மற்றும் ஒரு (01) வருட நிறைவேற்றுத் தர அனுபவம் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் தொலைத்தொடர்பு துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவைப் பெற்றிருக்க வேண்டும்.

உதவி முகாமையாளர் (பாதீடு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்)
Assistant Manager (Budget and Programmes)
பதவிக் குறியீடு MA 5-3 FM 1 பதவிகளின் எண்ணிக்கை - 01
உதவி முகாமையாளர் (நிதிச் செயற்பாடுகள்)
Assistant Manager (Financial Operations)
பதவிக் குறியீடு MA 5-3 FM 2 பதவிகளின் எண்ணிக்கை - 01

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MA5-3) - ரூபா 79,440-10 x- 2,040-15 x 2,230 - 144,440 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 166,117.00 ரூபாவாகும்.
- CAASL இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

தகைமைகள் மற்றும் அனுபவம்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்	உள்வாரி விண்ணப்பதாரிகள்
விருப்பத் தேர்வு 1 இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் கணக்கியல், முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் வர்த்தகத்தில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம் அல்லது ஒரு (01) வருடகால நிறைவேற்றுத் தர அனுபவம் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனமொன்றின் தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா **விருப்பத் தேர்வு 2** இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICASL) அல்லது முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA) அல்லது சான்றுபடுத்திய மற்றும் கூட்டுவர்த்தக கணக்காளர் (ACCA) இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அரசாங்கத் திணைக்களம்/ பொது தொழில்முயற்சி அல்லது ஒரு (01) வருடகால நிறைவேற்றுத் தர அனுபவம் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனமொன்றின் தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா **விருப்பத் தேர்வு 3** மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / வாழ்தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்றிறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் ஒரு (01) வருடகால நிறைவேற்றுத் தர அனுபவம் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனமொன்றின் தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா	**விருப்பத் தேர்வு 1** வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல் **விருப்பத் தேர்வு 2** CAASL இல் சிவில் விமான சேவைகள் உதவியாளர் / அதிகாரி பதவியின் IIஆம் தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோராவர்.

உதவி முகாமையாளர் (புள்ளிவிபரம் மற்றும் முன்கண்காணிப்பு)
Assistant Manager (Statistics & Forecasting)
பதவிக் குறியீடு MA 5-3SP 3 பதவிகளின் எண்ணிக்கை - 01

வழங்கப்படும் சம்பளம்: (சம்பள அளவு (MA5-3) - ரூபா 79,440-10 x- 2,040-15 x 2,230 - 144,440 - 01/2025 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் - 2027-01-01ஆம் திகதியில் முழுமையாக அமுல்படுத்தப்படும்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 166,117.00 ரூபாவாகும்.
- CAASL இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

தகைமைகள் மற்றும் அனுபவம்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்	உள்வாரி விண்ணப்பதாரிகள்
விருப்பத் தேர்வு 1 இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் புள்ளிவிபரவியல் அல்லது எண் கணிதம் என்பவற்றில் ஒன்றை பிரதான பாடமாகக் கொண்ட மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம் அல்லது ஒரு (01) வருடகால நிறைவேற்றுத் தர அனுபவம் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனமொன்றின் தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா **விருப்பத் தேர்வு 2** மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / வாழ்தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்றிறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் ஒரு (01) வருடகால நிறைவேற்றுத் தர அனுபவம் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனமொன்றின் தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா	**விருப்பத் தேர்வு 1** வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல் **விருப்பத் தேர்வு 2** CAASL இல் சிவில் விமான சேவைகள் உதவியாளர் / அதிகாரி பதவியின் IIஆம் தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகாலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோராவர்.

வயதெல்லை

பதவிகள்	வயதெல்லை	குறிப்புகள்
பணிப்பாளர்	35 - 55 வயதுக்கிடையில்	உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
முகாமையாளர்/ சிரேஷ்ட சிவில் விமானசேவை பரீட்சகர்கள் / சிவில் விமானசேவை பரீட்சகர்கள்	22 - 45 வயதுக்கிடையில்	இலங்கை விமானப்படை, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம், உள்ளூர் விமான சேவைகள் அல்லது பறக்கும் பாடசாலைகள் ஆளணி சேவையில் உள்ளவர்கள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

- மேலதிக தகவல்கள், பதவி விபரங்கள், விசேட தொழில்நுட்பக் கொடுப்பனவிற்கான தேவைப்பாடுகள் மற்றும் நிலையான விண்ணப்பப் படிவம் என்பவற்றை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் www.caa.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை employment@caa.lk எனும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாக 2026-06-08ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மின்னஞ்சலில் அனுப்பும் போது விண்ணப்பிக்கும் பதவி/ பதவிகளின் பெயரை விடயத் தலைப்பில் (subject line) உள்ளடக்குவதை உறுப்படுத்திக் கொள்ளவும். சகல சமர்ப்பிப்புகளும் அங்கீகரிக்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பதவி / பதவிகளுக்காக தகுதியை நிரூபிக்க தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கான ஆவண ஆதாரங்களின் பிரதிகளுடன் இணைத்து அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.
- நிலையான விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள் நிறுவனத்தின் தலைவர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதானால் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.
- தகுதி மூலப்பிரமாணங்களை திருப்திகரமாகப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வு / பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்

சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி,
இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை,
இல. 152/1, மினுவாங்கொட வீதி,
கட்டுநாயக்க.
2026-05-24.